செய்திக் குறிப்பு எண் :- 444 நாள் :- 12.12.2012

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின்

## அறிக்கை – 12.12.2012

திருப்பூர் மாவட்டம், திருமூர்த்தி அணையிலிருந்து கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள பரம்பிக்குளம் ஆழியார் திட்ட பாலார் உப வடிநிலத்தின் மூன்றாம் மண்டல பாசனப் பகுதிகளுக்கு பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடக் கோரி, திருமூர்த்தி நீர்த்தேக்க திட்டக் குழு உள்ளிட்ட கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

வேளாண் பெருங்குடிமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருமூர்த்தி அணையிலிருந்து, பரம்பிக்குளம் பிரதானக் கால்வாய், உடுமலைப்பேட்டை கால்வாய் மற்றும் உயர்மட்டக் கால்வாய் ஆகியவற்றில் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள பரம்பிக்குளம் ஆழியார் திட்ட பாலார் உப வடிநிலத்தின் மூன்றாம் மண்டலப் பாசனப் பகுதிகளுக்கு பாசனத்திற்காக 13.12.2012 முதல் தேவைக்கேற்ப இடைவெளி விட்டு தண்ணீர் திறந்துவிட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால் கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள 94,362 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை-9